முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.2.2025) நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் சந்தித்து, 2019 முதல் 2024 ஆண்டுகள் வரையிலான தனது தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உரைகள் அடங்கிய "Connecting People and Policy – A Legislative Voice" என்ற ஆங்கில புத்தகத்தை வழங்கினார்.

கூடலூர் தொகுதியில் கடந்த 50 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள ஜென்மம் நிலம் பிரிவு17 நிலப்பிரச்சினைக்கு தீர்வுகான உறுதுணையாக இருந்து துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள, தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று, கடந்த 30.1.2025 அன்று தலைமைச் செயலகத்தில் அரசு அதிகாரிகளை அழைத்து ஆலோசனை மேற்கொண்ட கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, தி.மு.க. தோழமைக் கட்சி மற்றும் கூடலூர் மக்கள் சார்பில் கழக துணைபொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசாவுக்கும் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவிக்கப்பட்டது. உடன் மாவட்ட பொறுப்பாளர் கே.எம்.ராஜ், உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் கா.ராமச்சந்திரன் உட்பட திமுக தோழமைக் கட்சியினர் பலர் உள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் – சிவகாசி வட்டம் – ஆனையூர் கிராமத்தில் தனியார் பட்டாசு ஆலை வெடி விபத்து!

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

விருதுநகர், பிப். 22 -

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஆனையூர் கிராமத்தில் இயங்கிவரும் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கிடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஆனையூர் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் 19.02.2025 அன்று மாலை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சிவகாசி வட்டம், திருத்தங்கல், திருவள்ளுவர் காலனியைச் சேர்ந்த சுரேஷ் (வயது 38) த/பெ.செல்வராஜ் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர் பால்பாண்டி (வயது 31) த/பெ. பிச்சைக்கனி என்பவருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

"சிங்கப்பூரில் முத்தமிழறிஞர் கலைஞர்" நூல் வெளியீட்டு விழா!

சென்னையில் கி.வீரமணி தலைமையேற்று வெளியிடுகிறார்!

சென்னை, பிப். 22 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரே ஒரு முறை சிங்கப்பூருக்கு 1999ஆம் ஆண்டு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார்.

அந்தப் பயணம் குறித்த தகவல்கள், செய்திக் குறிப்புகள், தலையங்கங்கள், புகைப்படங்கள், உரையாற்றிய பேச்சு, நடத்திய சந்திப்புகள் எனப் பல்வேறு தகவல்களை ஆவணப்படுத்தும் நூல் வெளியீட்டு விழா சென்னையில் இன்று (22.2.2025 - சனிக்கிழமை) சென்னை மயிலாப்பூர், சி.ஐ.டி. காலனியில் அமைந்துள்ள கவிக்கோ மன்றத்தில் நடைபெறுகிறது.

'செம்மொழி' சமூக, இலக்கிய இதழின் ஆசிரியரும் சிங்கப்பூர் தமிழவேள் நற்பணி மன்றத்தின் செயலாளருமான எம்.இலியாஸ் எழுதித் தொகுத்துள்ள இந்நூலை திராவிடர் கழகத் தலைவர், கி.வீரமணி அவர்கள் தலைமையேற்று வெளியிடுகிறார்.

நூலைப் பெற்றுக் கொண்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், நாடாளுமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளருமான திருச்சி சிவா எம்.பி. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கலைஞரின் சிங்கப்பூர் வருகையின்போது சிங்கப்பூரில் தமிழ் முரசு நாளிதழில் பணியாற்றிவந்த இன்றைய தூத்துக்குடி தொகுதி இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளருமான கலைஞரின் புதல்வி கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கடந்த செப்டம்பர் 1 ஆம் தேதி (1.9.2024) சிங்கப்பூரில் இந்நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார் என்பது நினைவு கூரத்தக்கது.

சிங்கப்பூரின் அன்றைய தொடர்பு, கலைகள் அமைச்சராகவும் வர்த்தக, தொழில் இரண்டாம் அமைச்சராகவும் பொறுப்புவகித்த பிரிகேடியர் ஜெனரல் ஜார்ஜ் இயோவின் அழைப்பை ஏற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி வகித்த முத்தமிழறிஞர் கலைஞர், அன்றைய பிரதமர் கோ சோக் டோங் உட்பட பல்வேறு அரசியல் தலைவர்களுடனான சந்திப்புகளை இந்த மூன்று நாள் வருகையின் போது மேற்கொண்டார்.

'தமிழ் அலை' பதிப்பகம் மற்றும் 'செம்மொழி' சமூக இலக்கிய இதழின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்குத் தொடங்கும். மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை நிகழ்ச்சி நடைபெறும்.

நாளை நடைபெறுகிறது!

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

சேலம், பிப். 22 -

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் நாளை (23.02.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில் மாவட்ட கழக அலுவலகம், கலைஞர் மாளிகை", வீரபாண்டியார் அரங்கில்", மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மருத்துவ அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மீனவர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதி திராவிடர் நலக்குழு ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

01.03.2025 அன்று கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடுவது குறித்து

கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறுகிறது!

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

மயிலாடுதுறை, பிப். 22-

மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் இன்று (22.2.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

கழகத்தலைவர், முதலமைச்சர் பிறந்த நாள்.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு

மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு

நாமக்கல் பிப். 22 -

நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு இன்று (22-02-2025 - சனிக்கிழமை) காலை 9 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி அறிவித்துள்ளார்

தி.மு.க. மருத்துவ அணி

தி.மு.க. மருத்துவ அணி
மாநில நிர்வாகிகள்
அவசர ஆலோசனைக் கூட்டம்

மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் **22.02.2025** சனிக்கிழமை காலை **11.00** மணி அளவில், **ஆனந்த் கிரான்ட் பேலஸில்** (தளி சாலை, ஓசூர்) மருத்துவ அணி மாநிலத் தலைவர் மருத்துவர் கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி. அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : **1. கழகத் தலைவர், 'திராவிட மாடல்' நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா**
2. அணியின் வளர்ச்சிப் பணிகள்

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 20.02.2025

மருத்துவர் **எழிலன் நாகநாதன்** எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி

தி.மு.க. நெசவாளர் அணி - வடக்கு மண்டல நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

கழக நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிக்கை!

சென்னை, பிப். 22 -

கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. நெசவாளர் அணி வடக்கு மண்டலத் திற்குட்பட்ட சென்னை வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, வடகிழக்கு, திருவள்ளூர் மேற்கு, மத்திய, கிழக்கு, காஞ்சிபுரம் வடக்கு, தெற்கு, மாநகரம், தாம்பரம் மாநகரம், கடலூர் கிழக்கு, மேற்கு, விழுப்புரம் வடக்கு, தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், வேலூர், ஆகிய மாவட்ட - மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 25-2-2025 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம் "கலைஞர் அரங்கில்' எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம், காஞ்சிபுரம் தி. அன்பழகன் ஆகியோர் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப. சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் - வனத்துறை அமைச்சர் பொன்முடி, கழக அமைப்புச் செயலாளர், ஆர்.எஸ். பாரதி தலைமைக் கழக செய்தித் தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலைத. வேலு ஆகியோர் சிறப்புரையாற்று கிறார்கள். கழக த. ரமேஷ், கே.வெங்கட்ராமன் ஆகியோர் நன்றியுரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் வடக்கு மண்டல நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா;

3. கழக ஆக்கப் பணிகள் - குறித்து.

இவ்வாறு தி.மு.க. நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.ஜே. அகத்தியப்பன்
பிப்ரவரி 22 (2005)



காஞ்சிபுரம் நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

காஞ்சிபுரம் நகரக் கழகப் பொறுப்பாளர், அவைத்தலைவர் மற்றும் நகர்மன்ற கட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு அச்சக தொழிற்சங்க பொதுச்செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

மொழிப்போர், ஈழத்தமிழர் பாதுகாப்பு, எரிசாராய கமிஷன் ஆணை நகல் எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.